## மயிலாடுதுறை நகராட்சி

**2020–ம் ஆண்டு ஜுலை மாதம் 30–ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை03.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.07.2020** | **1)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் **2020–ம்** ஆண்டு ஜுன் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானஎண் .810**<br>பதிவு செய்யப்பட்டது |
| **30.07.2020** | **2)** மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி.அஞ்சலை / சின்னப்பன் என்பவர் 30.06.2020 அன்று ஒய்வு பெற்று உள்ளதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி நகராட்சி பஙகுத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.2372/2020/பி2 | **தீர்மான எண்.811**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| **30.07.2020** | **3)** மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.அன்புராஜா / குப்புசாமி என்பவர் 30.06.2020 அன்று ஒய்வு பெற்று உள்ளதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி நகராட்சி பஙகுத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.2373/2020/பி2 | **தீர்மான எண்.812**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **30.07.2020** | 4) மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி.பார்வதி / அர்ச்சுணன் என்பவர் 30.06.2020 அன்று ஒய்வு பெற்று உள்ளதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.**<br>**ந.க.எண்.2370/2020/பி2** | **தீர்மான எண்.813**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| **30.07.2020** | 5) அரசாணை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண். 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.13.10.2017—ன்பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3984/2018/தம3 நாள்.08.03.2019—ல் கொ.ஒ.ம.வ / ந.ஊ.து.இ(தம) எண்.135/2019—ன்படி வார்டு எண்—8, பிளாக் எண்— 16 சர்வே எண்— 746/3— இல் அமைந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள சாலை, பூஙகா, இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 922/2020) மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு திரு. எஸ்.அருள்ராஜ் என்பவரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி சாலை 13119 சதுரடி பூஙகா 1230 சதுரடி இடத்தினை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரித்திட்டம் மயிலாடுதுறை அவர்களிடம் தெரிவிக்கலாம். மேற்படி தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,<br>**ந.க.எண்.1056/2019/எப்1.** | **தீர்மான எண்.814**<br>பதிவு செய்யப்பட்டது |
| **30.07.2020** | 6) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 543/2020/தம3 நாள்.04.03.2020 —ன்படி வார்டு எண்—4, பிளாக் எண்— 16 சர்வே எண்— 757,759 /3—இல் அமைந்த குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலை, பூஙகா, இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 916/2020) மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு திருவாளர்கள், ஆர்.பாஸ்கரன் மற்றும் ஆர். சதீஸ் என்பவரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி சாலை 9857.18 சதுரடி, மற்றும் பொது உபயேகம் 160 சதுரடி இடத்தினை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரித்திட்டம் மயிலாடுதுறை அவர்களிடம் தெரிவிக்கலாம். மேற்படி தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,<br>**ந.க.எண்.350/2020/எப்1.** | **தீர்மான எண்.815**<br>பதிவு செய்யப்பட்டது |
| **30.07.2020** | 7) மயிலாடுதுறை நகராட்சி – ONLINE TENDER UPLOAD AND OPENING செய்வதற்கு நகராட்சி ஆணையர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகிய இருவருக்கும் E-Token பெற வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ.5250/-(ரூபாய் ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :**அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2719 /2020/இ1** | **தீர்மான எண்.816**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.07.2020 | 8) மயிலாடுதுறை நகராட்சி – சுவாசம் திட்டத்தின் கீழ் வார்டு எண்.27 சின்ன கண்ணாரத் தெருவிற்கு மழைநீர் வடிகால் அமைத்திட இந்நகர்மன்ற தீர்மான எண்:490 நாள்:30.01.2019-ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில், குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.K.செந்தில் அவர்களுக்கு மன்ற தீர்மானம் எண்.544, நாள்:30.03.2019ன்படி வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பணி மேற்கொண்ட போது பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்ததால் அப்பணியினை வார்டு எண்.2 திருவிழந்தூர் வடக்கு வீதி குட்டகுளத்திற்கு மாற்றம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களிடம் இருந்து மாற்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை வார்டு எண்.2 திருவிழந்தூர் வடக்கு வீதி குட்டகுளத்தில் மழைநீர் வடிகால் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்திட 07.03.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.0849/2019/இ1** | **தீர்மான எண்.817**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| 30.07.2020 | 9)மயிலாடுதுறை நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-2020 பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆஙகிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். 3587/2019/இ1 நாள்.29.10.2019–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன்பேரில் Accord Aadvertising Agencies அவர்களின் கடித எண்.AAA/0428/19–20 நாள்.29.11.2019–ல் TRINITY MIRROR மற்றும் DINABOOMI செய்திதாளில் 31.10.2019அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.51,608/– (ரூபாய் ஐம்பத்தி ஒராயிரத்து ஆறுநூற்று எட்டு மட்டும்) வழஙக கோரி உள்ளார்கள். இதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு::** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3587/2019/இ1** | **தீர்மான எண்.818**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| 30.07.2020 | 10) மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையம் (DBFOT BASIS) PPP MODE RFQ அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆஙகிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.4816/2016/இ1 நாள்.31.03.2020–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன்பேரில் Accord Aadvertising Agencies அவர்களின் கடித எண்.AAA/0005/20–21 நாள்.05.04.2020–ல் FINANCIAL EXPRESS மற்றும் DINABOOMI செய்திதாளில் 02.04.2020அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.44,688/– (ரூபாய் நாற்பத்தி நான்காயிரத்து ஆறுநூற்று எண்பத்தி எட்டு மட்டும்) வழஙக கோரி உள்ளார்கள். இதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 4816/2016/இ1** | **தீர்மான எண்.819**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.07.2020** | **11)** மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையம் (DBFOT BASIS) PPP MODE RFQ அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆஙகிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.4816/2016/இ1 நாள்.05.05.2020–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன்பேரில் Accord Aadvertising Agencies அவர்களின் கடித எண்.AAA/0069/20–21 நாள்.28.06.2020–ல் FINANCIAL EXPRESS மற்றும் DINABOOMI செய்திதாளில் 07.05.2020அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.44,688/– (ரூபாய் நாற்பத்தி நான்காயிரத்து ஆறுநூற்று எண்பத்தி எட்டு மட்டும்) வழஙக கோரி உள்ளார்கள். இதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 4816/2016/இ1** | **தீர்மான எண்.820**<br>அனுமதிக்கப்பட்டது |
| **30.07.2020** | **12)** மயிலாடுதுறை நகராட்சி - சமுதாய கூடம் (மயூரநாதர் மஹால்) தட்டாரத் தெரு (வார்டு எண்.18)-ல் மருத்துவ பயன்பாட்டிற்காக கீழ்கண்ட பராமரிப்பு பணிகளை உடன் மேற்கொண்டு சரிசெய்து தரும்படி சிறப்பு/தனி அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.<br>அதன்படி பழுதடைந்த ஜன்னல் சரிசெய்தல், முகப்பு சுவர் M.S. Grill Gate, Electrical fans, lights, Starter for motor போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பிட்ட காலஅவகாசத்திற்குள் இப்பணியை முடித்து மருத்துவம் மற்றும் சுகாதாரதுறை பயன்பாட்டிற்கு வழங்க வேண்டியுள்ளதால் அதற்காகும் செலவீனத் தொகை ரூ.3,65,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் இந்நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**:மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2874/2020/இ1** | **தீர்மான எண்.821**<br>அனுமதிக்கப்பட்டது |
| **30.07.2020** | **13)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – ஆறுபாதி கிராமத்தில் அமைந்துள்ள கழிவுநீா் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) கழிவுநீா் Inlet Pondல் மண் நிரம்பி அடைந்துள்ளது. இதனால் கழிவுநீா் உள்ளே செல்ல முடியாமல், சுத்திகரிப்பு செய்யப்படாமல் வெளியேறி கலக்கிறது. இதனை உடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. (Faculity Pond) Inlet Pond-ல் உள்ள நிரம்பியுள்ள கசடு மண்ணை அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. அப்பகுதி குழாய் அடைப்பு மண்ணையும் வெளியேற்ற வேண்டியுள்ளது. இதற்கு தற்காலிக சீரமைப்பு பணியாக HITACHI/CHAIN DOZZER எந்திரத்தை ஒப்பந்ததாரா் மூலம் வாடகைக்கு பயன்படுத்தி அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. முதல் கட்டமாக இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம்) ஆகும். மேலும் இப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 2814/2020/இ1** | **தீர்மான எண்.822**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.07.2020** | **14)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – PS.4 முதல் PS.8 வரை செல்லும் UGSS Backbone sewer-II (பிரதான கழிவுநீர் செல்லும் பாதை II) Manhole மற்றும் Sewer-ல் Block இருப்பதாலும் குழாய்களில் கழிவுநீர் கசிவு/சிறுவெடிப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுகிறது. இதனால் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான தரங்கம்பாடி சாலையில், குழாய் செல்லும் பாதையின் மண் அரிப்பு ஏற்பட்டு பள்ளம் விழுகிறது. இதற்கு Sheet Pile, Special Centering materials, Dewatering motor, Plugging of near by manholes, Supply & fixing of M.S. Sheet (including Fabrication & Welding) போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியின் இரண்டாம் மற்றும் கடைசி பகுதியாக ( Part II & Final area) தரங்கம்பாடி சாலையில் Culvert முதல் PS.8 (UGSS)–வரை ஏற்படும் Burst/Leakage சரிசெய்ய வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம்) ஆகும். மேலும் இப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2813/2020/இ1** | **தீர்மான எண்.823**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| **30.07.2020** | **15)** மயிலாடுதுறை நகராட்சி - பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – P.S 4 முதல் PS.8 வரை செல்லும் UGSS BackBone Sewer-II(பிரதான கழிவுநீர் செல்லும்பாதை II) Manhole மற்றும் Sewer-ல் Block இருப்பதாலும் குழாய்களில் கழிவுநீர் கசிவு / சிறுவெடிப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுகிறது. இதனால் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான தரங்கம்பாடி சாலையில், குழாய் செல்லும் பாதையில் மண் அரிப்பு ஏற்பட்டு பள்ளம் விழுகிறது. போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. இதனை உடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. இதற்கு Sheet Pile, Special Centering materials, Dewatering motor, Plugging of near by manholes, Supply & fixing of M.S. Sheet (including Fabrication & Welding) போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.இப்பணியில் ஒருபகுதியாக தரங்கம்பாடி சாலையில் Subjail/தாலுக்கா அலுவலகம் முதல் சியாமளா தேவி கோவில் Culvert வரை ஏற்படும் Burst/Leakage சரிசெய்ய வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவீனத் தொகை ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2953/2020/இ1** | **தீர்மான எண்.824**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.07.2020</td>
<td>16) இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் உந்து நிலையம் எண்.4 முதல் கழிவுநீர் உந்து நிலையம் எண். 8 வரை புதிதாக கழிவுநீர் உந்து குழாய் பதிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தேசிய ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.7724/99/இ1 நாள்.30.06.2020–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன் பேரில் TRINITY MIRROR மற்றும் மக்கள்குரல் செய்தித்தாளில் 01.07.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் ரூ. 70,875/– (ரூபாய் எழுபதாயிரத்து எண்ணூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) வழஙக கோரி EYEDEA BRAND SOLUTION அவர்கள் கடிதம் எண். DIPR 2451/TENDER/2020 நாள்: 01.07.2020ம் தேதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு:</u>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 7724/99/இ1</td>
<td>தீர்மான எண்.825<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.07.2020</td>
<td>17) அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MA1)துறை நாள்.04.02.2019–ல் தெரிவித்துள்ளவாறு ஆன்லைனில் விண்ணபித்த பொறியாளருக்கு தொழிற்சார்ந்த வல்லுநர்கள் பதிவு சான்று கீழ்காணுமாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது
<table>
<tr><th>வரிசை எண்.</th><th>தொழில் சார்ந்த வல்லுநர்களின் பெயர்</th><th>தொழில்தரம்</th><th>பதிவு எண்</th><th>சான்று வழஙகப்பட்ட காலம்</th></tr>
<tr><td>1</td><td>ஜே.ஸ்ரீதர்</td><td>பொறியாளர் தரம் – 3</td><td>097/LS/2019/00030</td><td>28.07.2020 to 31.03.2024</td></tr>
</table>
மேற்கண்டவாறு 28.07.2020 வரை அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த வல்லுநரின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண். 4538/2019/எப்1.</u></td>
<td>தீர்மான எண்.826<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

**30.07.2020**

**18)** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018-19** (7th SHPC)ன்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **30.01.2020** அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர் கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018-19** (7th SHPC) | | | | | |
| 1. | **18** எண்ணிக்கை Battery Operated வாகனம் வாஙகுதல் | 32,40,0**00/-** | M/s Priyam Industries and Equipments, Dharapuram. | ரூ.**2648646.00** (-) 18.25% குறைவு | M/s Priyam Industries and Equipments, Dharapuram. |
| | | | M/s Neptune Automation, Erode. | ரூ.**3195000.00** (-) 1.39% குறைவு | |

<u>அலுவலககுறிப்பு</u>

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: **6**ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1634/2018/இ1**

**தீர்மான எண்.827**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td>30.07.2020</td>
<td>19) மயிலாடுதுறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன்கீழ் “Purchase of Battery operated Vehicle as per specification 18 Nos” பணிக்கு 30.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட M/s Priyam Industries and Equipments Dharapuram நிறுவனத்திற்கு 10.03.2020 அன்று LOA கொடுக்கப்ட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் காப்பு தொகை செலுத்தி பணி உத்தரவு பெற்றுக்கொள்ள முன்வராததால் பணியின் முக்கியத்துவம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்திடவும், நிர்வாக நலன் கருதி இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1634/2018/இ1</td>
<td>தீர்மான எண்.828<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.07.2020</td>
<td>20) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN51.P.3556 டிராக்டர் டிப்பர் கனரக வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் புதியதாக சப்பளை செய்வதற்கான 16.06.2020ம் விலைப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர்</th><th>விலை விகிதம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>OMH SHANTHI TYPRS,<br>29, PEDARI STREET,<br>SIRKALI – 609 110.</td><td>ரூ.25800/–</td></tr>
<tr><td>2.</td><td>KUMAR TYPERS & WHEEL CARE,<br>SIRKALI MAIN RAOD,<br>MAYILADUTHURAI – 609 001.</td><td>ரூ.25200/–</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளி வரிசை எண்.2ல் உள்ள குமார் டயர்ஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியில் குறைவாக உள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மயிலாடுதுறை குமார் டயர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5057/2019/எச்1</td>
<td>தீர்மான எண்.827<br>அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

## 2020–ம் ஆண்டு ஜூலை மாதம்
## அவசர மன்ற கூட்டப் பொருள்

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN51P 3446 டிராக்டர் டிப்பர் கனரக வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் புதியதாக சப்பளை செய்வதற்கான **16.06.2020ம்** விலைப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் விவபரபடி இரண்டு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| **1.** | OMH SHANTHI TYPRS,<br>29, PEDARI STREET,<br>SIRKALI – 609 110. | **ரூ.25800/–** |
| **2.** | KUMAR TYPERS & WHEEL CARE,<br>SIRKALI MAIN RAOD,<br>MAYILADUTHURAI – 609 001. | **ரூ.25200/–** |

மேற்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரிசை எண்.2ல் அளித்துள்ள குமார் டயர்ஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மயிலாடுதுறை குமார் டயர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5057/2019/எச்1**